No. of Printed Pages : 8

6761655

8401

பதிவு எண் 9 6 5 0 4 7 1

# மொழிப்பாடம் - பகுதி I - தமிழ்

கால அளவு : 3.00 மணி நேரம் ]

[ மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிப்பில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

14x1=14

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. பொருத்துக.

| | | |
|---|---|---|
| (அ) ஆதிநீடல் | - | பைங்கூழ் |
| (ஆ) அடி அகரம் ஐ ஆதல் | - | செங்கதிர் |
| (இ) இனமிகல் | - | காரிருள் |
| (ஈ) முன் நின்ற மெய் திரிதல் | - | பெருங்கொடை |

2. ஒப்புரவு என்பதன் பொருள் ________.

(அ) ஊருக்கு உதவுவது (ஆ) அடக்கமுடையது

(இ) செல்வமுடையது (ஈ) பண்புடையது

[ திருப்புக

Scanned with CamScanner

3. **கூற்று** : எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து, புறம் சார்ந்த நூல்.

**காரணம்** : சேரமன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்.

(அ) இரண்டிற்கும் தொடர்பில்லை

(ஆ) **கூற்று** சரி; **காரணம்** தவறு

(இ) **கூற்று** தவறு; **காரணம்** சரி

(ஈ) இரண்டும் சரி

4. 14 வயதுக்கு உட்பட்ட அனைவருக்கும் கட்டாய இலவசக்கல்வி வழங்கப்படல் வேண்டும் என்பதை வலியுறுத்தும் அரசியலமைப்பு சட்டப்பிரிவு :

(அ) 47 (ஆ) 43 (இ) 40 (ஈ) 45

5. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.

(அ) உதவியாள் (ஆ) காவலாளி (இ) ஆசிரியர் (ஈ) மேலாளர்

6. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ________ நினை.

(அ) மறதியால் கெட்டவர்களை (ஆ) முகக்குறிப்பை அறிந்தவரை

(இ) சொல்லேர் உழவரை (ஈ) எண்ணியதை எண்ணியவரை

7. Classical Language - கலைச்சொல் தருக.

(அ) சிறந்த மொழி (ஆ) செம்மொழி

(இ) தனிமொழி (ஈ) தொன்மொழி

8. பொருத்தமான இலக்கிய வடிவத்தைத் தேர்க.

(அ) யானை டாக்டர் - குறும் புதினம்

(ஆ) ஏதிலிக் குருவிகள் - மரபுக் கவிதை

(இ) ஐங்குறுநூறு - புதுக்கவிதை

(ஈ) திருமலை முருகன் பள்ளு - சிறுகதை

9. நிழல்போலத் தொடர்ந்தான் - இது எவ்வகை உவமை ?

(அ) வடிவம் (ஆ) வினை (இ) உரு (ஈ) பயன்

Scanned with CamScanner

10. பற்று நீங்கியவனுக்கு உண்டாவது - பற்றற்றவனைப் பற்றுவதால் உண்டாவது :

(அ) பொருள்களின் துன்பம் அகலும் - பற்றுகள் அகலும்

(ஆ) பற்றுகள் பெருகும் - பொருள்களின் இன்பம் பெருகும்

(இ) பொருள்களின் இன்பம் பெருகும் - பற்றுகள் பெருகும்

(ஈ) பற்றுகள் அகலும் - பொருள்களின் துன்பம் அகலும்

11. வெண்சுவை - இலக்கணக்குறிப்பு தருக.

(அ) உவமைத்தொகை (ஆ) வினைத்தொகை

(இ) உம்மைத்தொகை (ஈ) பண்புத்தொகை

12. ''ஒற்றை வைக்கோல் புரட்சி'' என்னும் நூலை எழுதியவர் :

(அ) நம்மாழ்வார் (ஆ) பாரதிதாசன்

(இ) பாரதியார் (ஈ) மசானபு ஃபுகோகா

13. கீழ்க்கண்ட புதிருக்கான விடையை தேர்க.

பூவின் உறுப்பும் நானே; புன்னகையின்

பிறப்பிடமும் நானே ............................

(அ) மதி (ஆ) கம்பு (இ) ஆழி (ஈ) இதழ்

14. தவறான இணையைத் தேர்வு செய்க.

(அ) மல்லி + இலை - உயிர் + மெய்

(ஆ) கலை + அழகு - உயிர் + உயிர்

(இ) பல் + பொடி - மெய் + மெய்

(ஈ) மெய் + அறிவு - மெய் + உயிர்

[ திருப்பு

Scanned with CamScanner

## பகுதி - II

### பிரிவு - 1

குறிப்பு : எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3x2=6

15. 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது ?

16. மருந்து எது ? மருந்து மரமாக இருப்பவர் யார் ?

17. மனோன்மணீயம் - நூற்குறிப்பு வரைக.

18. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

### பிரிவு - 2

குறிப்பு : **எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடையளிக்கவும். 2x2=4

19. தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறு குறிப்பு வரைக.

20. உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.

21. ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து நீங்கள் அறிவது யாது ?

### பிரிவு - 3

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். 7x2=14

22. புணர்ச்சி விதி தருக :
செங்கயல் **(அல்லது)** அணிந்துரை

23. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
தங்கை **(அல்லது)** கால்நடை

24. கலைச்சொல்லாக்கம் - பொருள் தருக.

25. பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அறிந்து **(அல்லது)** துய்த்தல்

Scanned with CamScanner

26. செய்தார், கண்டான், வென்றாள், பேசினர் - ஆகிய சொற்களில் உள்ள இடைநிலைகள் யாவை ? அவை எந்தக் காலத்தைக் குறிப்பிடுகின்றன ?

27. என்னே! மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக் கலை (செய்தித் தொடராக்குக)

28. பாடல் வரிகளில் உள்ள மோனை, இயைபு நயங்களை எடுத்துக் காட்டுக.
வளர்ந்துவளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ ? வெண்ணிலாவே!

29. காற்புள்ளி, வினாக்குறி அமையுமாறு ஒரு தொடர் எழுதுக.

30. சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடராக்குக.
நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை.

## பகுதி - III

### பிரிவு - 1

குறிப்பு : **எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

31. ''சலச வாவியில் செங்கயல் பாயும்'' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32. ''கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணியது'' - யாது ?

33. சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார் ?

34. இன்குலாப், ''உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்'' எனக் கூறுவதன் நயத்தை விளக்குக.

### பிரிவு - 2

குறிப்பு : **எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

35. ''மலை, மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது'' - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்கவும்.

36. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா ? - நும் கருத்தை எழுதுக.

[ திருப்புக

Scanned with CamScanner

37. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை ?

38. இயற்கையுடன் உரையாடல் ஒன்றைக் கற்பனையாகப் பத்து வரிகளில் எழுதுக.

## பிரிவு - 3

**3x4=12**

**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் விடை தருக.

39. (அ) உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

**அல்லது**


(ஆ) நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்
- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக. மையக் கருத்துடன் மூன்று நயங்களைச் சுட்டுக.

"தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க,
தெண் திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ"

**- கம்பர்**

41. பகுதி, விகுதி, இடைநிலை ஆகியவற்றைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.




42. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

அவசரக் குடுக்கை
முதலைக்கண்ணீர்
கைதூக்கிவிடுதல்
கானல்நீர்

Scanned with CamScanner